தமிழ்த் தேசிய கலை பண்பாட்டுப் பேரவை (இணை)
மேற்கு அவுஸ்ரேலியா
Tamil National Arts and Cultural Council (Inc)
Western Australia
ABN 40 514 343 190
Contact : tamilnacc@gmail.com tamilnacc.net.au 0400 204 581

## ஊடக அறிக்கை: தமிழீழத் தேசிய மாவீரர் நாள் - 2025

**உணர்வுகளை மதித்து ஒற்றுமையுடன் வீரவணக்கம் செலுத்த வேண்டுகோள்**: தமிழீழ விடுதலைப் போரில் தமது இன்னுயிரை ஈகம் செய்த **உயரிய தேசப் புதல்வர்களை** நினைவுகூரும் **தமிழீழத் தேசிய மாவீரர் நாள்** நிகழ்வுகளை முன்னிட்டு, மேற்கு அவுஸ்ரேலியாவில் வாழும் தமிழ் உறவுகளுக்கு **தமிழ்த் தேசிய கலை பண்பாட்டுப் பேரவை** விடுக்கின்ற அன்பான வேண்டுகோள் இது.

வரலாற்றைப் பேணிப் பாதுகாக்கும் உயரிய நோக்குடன் செயற்படும் எமது பேரவையானது, எதிர்வரும் **நவம்பர் 27, 2025** அன்று நடைபெறும் மாவீரர் நாள் நினைவெழுச்சி நிகழ்வுகளில், மக்கள் அனைவரும் **அழுத்தங்கள் இன்றி**ப் பங்கேற்று மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்த வேண்டும் என்று விரும்புகிறது.

அண்மையில், மேற்கு அவுஸ்ரேலிய தமிழ் அமைப்புகளுடன் நாம் நடத்திய சந்திப்பின் அடிப்படையில், **அனைவரின் உணர்வுகளுக்கும் மரியாதை அளித்து, ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தைப்** பேரவை வலியுறுத்த விரும்புகிறது.

**எமது அன்புரிமையான வேண்டுகோள்**: தமிழீழத் தேசியத் தலைவர் குறித்து வெவ்வேறு மனநிலைகளில் உள்ள அனைவரின் உணர்வுகளையும் பேரவை மதிக்கிறது. எனவே, அன்பான உறவுகள் அனைவரும், **எவ்வித தயக்கமோ, குழப்பமோ இன்றி, தங்களுக்கு மனநிறைவையும் ஆறுதலையும் அளிக்கும் இடத்தில் நடைபெறும் மாவீரர்நாள் நிகழ்வில்** கலந்துகொண்டு, தாயக விடுதலைக்காக வித்தாகிப்போன எமது மாவீரச் செல்வங்களுக்கு உங்கள் வீர வணக்கத்தைச் செலுத்துமாறு தமிழ்த் தேசிய கலை பண்பாட்டுப் பேரவை பணிவுடன் கேட்டுக்கொள்கிறது.

**நன்றி,**

**நிர்வாகம் தமிழ்த் தேசிய கலை பண்பாட்டுப் பேரவை**